ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 147 — 1975 ජනවාරි 17 වැනි සිකුරාදා — 1975.01.17
147 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு சனவரி மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 13 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவு திரட்டுக்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நகரவிருத்தி அறிவித்தல்கள் .. .. .. | 17 |


கவனிக்க—இலங்கைப் புகைவண்டிச் சபை சட்டமூலம் 1975 ம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### தெஹிவளை-கல்கிசைப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

1975 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக தெஹிவளைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நெல்வயல்கள் தவிர்ந்த அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூடவரியை 1975 ஆம் ஆண்டுக்கு தெஹிவளைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு, 1974 ம் ஆண்டு திசெம்பர் மீ 23 ந் உ.

1–411—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

### கச்சாய் கிராம சபை

இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகார தாபனமான கச்சாய் கிராம சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந் உ.

#### ஒழுங்கு விதிகள்

1\. (272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் பிரசித்தப்படுத்தப்பட்ட பொது மிருகமறுப்புக் களம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அச்சாரிபில் அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த பொதுச் சௌக்கிய பரிசோதகரினதும் பொறுப்பில் தலைவரின் பணிப்புரைகளுக்கமைய இருத்தல் வேண்டும். அம் மிருகமறுப்புக் களத்தினுள் ஒழுக்கநடையும், கட்டுப்பாடும் சுகாதார நிலைமைகளும் நிலவுவதற்கு அவ்வாறான உத்தியோகத்தர் பொறுப்பாகள் இருத்தல் வேண்டும்.

2\. (1) எவரும்—

(அ) தலைவரால் அக்கருமத்துக்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அம்மிருகம் பரிசோதிக்கப்பட்டு மனிதபாவனைக்கு ஏற்றது என்று அங்கீகரிக்கப்பட்டாலன்றியும் ;

வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்

அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

(ஆ) சபையினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்பட்டிருக்கும் மாட்டுத் தொழுவத்தில் அந்த மிருகம், கொல்லப்படுவதற்கு 24 மணித் தியாலங்களுக்கு குறையாத காலத்துக்கு கட்டப்பட்டிருந்தாலன்றியும் ; அத்துடன்

(இ) எத்தினத்திலும் மு. ப. 6.00 மணிக்கும் மு. ப. 9.00 மணிக்கு மிடையிலன்றியும்,

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுக்கலாகாது.

ஆயினும் விசேடமான தருணங்களில் இதன்கண் நிச்சயிக்கப்பட்ட நேரமல்லாத வேறெந் நேரத்திலும் எம்மிருகத்தையும் அறுப்பதற்குத் தலைவர் அதிகாரமளிக்கலாம்.

(2) எவரும்—

(அ) (1) (ஆ) பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 72 மணித்தியால நேரம் காலாவதியான பின்னர் எந்தநேரத்திலும், அத்துடன்

(ஆ) (1) ம் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது மிருகமறுப்புக்களத்திலிருந்து உயிருடன் வெளியே கொண்டுபோகப் பட்டிருப்பின் அது மீண்டும் பரிசோதிக்கப்பட்டு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றியும்

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுத்தலாகாது.

3. பசுக்கன்று ஒன்று மிருகமறுப்பு களத்தில் அறுக்கப்படுதல் ஆகாது.

4. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் இம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம்மிருகத்திற்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்கச்செய் தற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

5. மாட்டுத்தொழுவத்தின் அல்லது மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றைக் கொண்டுவரும் ஒவ்வொருவரும் இம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என பொறுப்பு உத்தியோகத்தரினால் நிராகரிக் கப்பட்டால், அப்படி நிராகரிக்கப்பட்ட உடனே அம்மிருகத்தை அவ்வளவைவிட்டு அகற்றவேண்டும் அல்லது அகற்றப்படச் செய்யவேண்டும்.

6. ஒழுங்கு விதி 2 (ஆ) ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அதுநோயுற்றது அல்லது மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால் சௌக்கியவைத்திய உத்தியோகத்தர் அல்லது 2 (அ) ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவரும் எம்மிருகமும் அறுக்கப்படுவதைத் தடை செய்யலாம்.

7. மிருகமறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுள்ளது அல்லது மனித பாவனைக்கு உகந்தல்லவென ஒழுங்குவிதி 2 (அ) குறிப்பிட்டுள்ள எவ்வுத்தியோகத்தரும் அபிப்பிராயப்பட்டால் அவர் அவ்விறைச்சியை அல்லது கழிவிறைச்சியை உடனடியாக அழித்தொழிக்கப்பட அல்லது அவ்விறைச்சி அல்லது அக்கழிவிறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனித பாவனைக்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத்தக்கவகையில் அது அகற்றப்படச் செய்யவேண்டும்.

8. மனித பாவனைக்கு உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது ஒழுங்குவிதி 6 ன் கீழ் அதன் அறுப்புத் தடை செய்யப்பட்டிருக்கும் எம் மிருகத்தையும் அறுப்பதற்கு அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோகத்தர் அனுமதிக்கக்கூடாது.

9. (அ) மனித பாவனைக்கு உகந்ததல்லவென 6 ம் ஒழுங்குவிதியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட இறைச்சி அல்லது கழிவிறைச்சி எதையும் 1 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வுத்தியோகத்தரினதும் ஆணையின் கீழன்றி அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியேற்றுதலாகாது.

(ஆ) அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோகத்தரினால் " இ. ச. கச்சாய் " என அம்மிருகச் சடலத்தின் முன்னங்கால் பாகத்திலும் பின்னங்கால் பாகத்திலும் முத்திரையிடப்பட்டாலன்றி, மனித பாவனைக்கென வுள்ள எம்மிருகத்தின் சடலத்தையும் அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியே கொண்டுபோதலாகாது.

10. எம்மிருகமும், வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது முன்னர் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தின் சடலமும் அவ்வளவிலிருந்து அகற்றப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு மனைத்தலம் சுத்தப்படுத்தப்படும் வரை அறுக்கப்படுதலாகாது.

11. தொற்றுநோய், ஒட்டு நாய், சருமநோய் எதனால் பீடிக்கப்பட்டி ருக்கும் அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்த நபரும் நோய் தொற்றுங்காலம் முடியும்வரைக்கும் மிருகமறுப்புக்களத்துக்குள் பிரவேசிப்பதை அல்லது மிருகமெதையும் அறுப்பதில் பங்கெடுத்துக் கொள்வதை மிருக மறுப்புக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அனுமதிக்கலாகாது.

12. நியாயமான காலங்கள் அனைத்திலும் மிருகமறுப்புக்களத்துக்குள் பிரவேசித்து பரிசோதனை செய்வது சௌக்கிய வைத்திய உத்தியோகத்த ருக்கு தலைவருக்கு அல்லது தலைவரால் முறையாக அதிகாரம் வழங்கப் பட்டுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் சட்ட முறையாதல் வேண்டுவதுடன் அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அன்னாருக்குத்தேவைப்படும் சகல உதவிகளைச் செய்யவும் வேண்டும்.

13. சபையினால் நிறுவப்பட்டுள்ள மிருகமறுப்புக்களத்தை உபயோகிப் பதற்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று சபைக்கு முற் பணமாகச் செலுத்தப்பட வேண்டுவதுடன் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டு ஒன்றில்லாமல் மிருகமெது வும் அறுக்கப்படுதலாகாது.

(அ) அறுப்புக் கட்டணங்கள் :

| | | |
|---|---|---|
| | | ரூ. ச. |
| மாடுகளுக்கு—தலையொன்றுக்கு | .. .. | 1 50 |
| வெள்ளாடுகளுக்கு—தலையொன்றுக்கு | .. | 1 0 |

(ஆ) தொழுவத்தில் கட்டுவதற்கான கட்டணங்கள் :

| | | |
|---|---|---|
| மாடுகளுக்கு—தலையொன்றுக்கு | .. | 1 0 |
| வெள்ளாடுகளுக்கு—தலையொன்றுக்கு | .. | 50 |

14. அறுப்புக்களப் பொறுப்பாளர்—

அறுப்புக்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட சகல மாடுகளுக்கும் ஒரு பதிவேட்டைப் பின்வரும் படிவத்தில் வைத்திருக்க வேண்டும்.

| மாட்டுச் சீட்டு இல. | விபரம் | நிறம் | வயது | வலது பக்கம் | இடது பக்கம் | இறைச்சிக்கடைக்காரர் பெயர் | மாட்டுக்காலைக்கு வந்தநேரமும் திகதியும் | பரிசோதித்த திகதி | கொண்டு செல்லப்பட்ட திகதி | மாட்டைப்பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரின் பெயர் முதலெழுத்து ஒப்பம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

15. இவ்வொழுங்கு விதிகளில்—

" மிருகம் " என்பது மாடு அல்லது ஆடு எனப்பொருள்படும்.

" மாடு " என்பது எருமைகளையும் உள்ளடக்கும்.

" தலைவர் " என்பது சபைத்தலைவர் எனப் பொருள்படும் ;

" சபை " என்பது கச்சாய் கிராமசபை எனப் பொருள்படும் ;

" சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் " என்பது சாவகச்சேரி சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் எனப்பொருள்படும்.

" பொதுச் சௌக்கிய பரிசோதகர் " என்பது கொடிகாமம் பொது சௌக்கிய பரிசோதகர் அல்லது அவர் சார்பில் பதில்கடமையாற்றும் வேறெந்தப் பொதுச் சௌக்கிய உத்தியோகத்தர் எனப்பொருள்படும்.

" பொறுப்பு உத்தியோகத்தர் " என்பது கொடிகாமம் பொதுச் சௌக் கிய உத்தியோகத்தர் அல்லது அவருக்காகப் பதில்கடமையாற்றும் பொதுச் சௌக்கிய உத்தியோகத்தர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட சபை உத்தியோகத்தர் எனப்பொருள்படும்.

1-632—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

# துணை விதிகள்

### குருவிற்றக் கிராமம்

கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்றக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஆக்கப்பட்டு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 03 ந் உ.

### துணைவிதி

1961 சனவரி 20 ந் தேதிய 12,272 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட மலகூட வேலைகள் சம்பந்தமான குருவிற்றக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஆக்கப்பட்ட துணைவிதிகள், 1 ஆம் துணைவிதியில் "ஒரு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ரூபா" என்னும் சொற்களை இடுவதனூலம் இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றன.

2. துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம், அது எம்மாதஞ் சம்பந்தமாகா வருமதியாகவுள்ளதோ, அதனை அடுத்த மாதத்தின் பத்தாந் தேதியன்றோ அதற்கு முன்னராகவோ செலுத்தப்படுதல் வேண்டும்.

1-541—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### வெள்ளவாய கிராமம்

கிராமசபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் மொனருகலை மாவட்டத்திலுள்ள வெள்ளவாய கிராமப் பிரதேசத்துக் கிராமசபையினால் ஆக்கப்பட்டு, அப்பிரிவின் (3) என்னும் உட் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ம் ஆண்டு சனவரி மீ 03 ந் உ.

### துணை விதி

நீர் வழங்கல் தொடர்பாக இந்தக் கிராமச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகள், சபைக்கு அவை ஏற்புடையதாக இருக்கும் வரை 27 (2) எனும் துணை விதியை உடனடுத்து 3 பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

(3) சபையினால் தாபிக்கப்பட்ட நீர்வழங்கற் சேவையினின்று தனியாருக்கான இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் வளவின் உடைமையாளர் அல்லது ஆட்சிபுரிபவர், உரிய முறையில் அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் பேரில் சொல்லப்பட்ட நீர்வழங்கற் சேவையினின்றும் தண்ணீர் பெறும் ஒவ்வொரு மாதம் சம்பந்தமாகவும் பின்வரும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(1) ஏதேனும் வர்த்தக நோக்கத்திற்காகத் தண்ணீர் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு ஆயிரம் கலன் தண்ணீருக்கும் மூன்று ரூபாவைக் கொண்ட கட்டணம் ஒன்று.

(2) ஏதேனும் பொது நிறுவனமொன்றினால் தண்ணீர் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு ஆயிரம் கலன்களுக்கும் இரண்டு ரூபா ஐம்பது சதங்களைக் கொண்ட கட்டணம் ஒன்று.

1-540—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### பெம்முல்லைக் கிராமம்

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு மாவட்டத்திலுள்ள பெம்முல்லைக்கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ம் ஆண்டு சனவரி மீ 02 ந் உ.

### துணை விதிகள்

1. சந்தைகளும் முறைச் சந்தைகளும் சம்பந்தமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள பெம்முல்லைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத்துணை விதிகளின் XXVII ஆம் பாகத்தின் 1 ஆம் துணை விதியின் நோக்கத்துக்கு பெம்முல்லைச் சந்தைக்கான சந்தைப் பிரதேசம் சந்தையிலிருந்து ஒரு மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துக்குள் உள்ள பிரதேசமாதல் வேண்டும்.

2. பெம்முல்லைச் சந்தையிலுள்ள இடம் அல்லது விற்பனைக் கூடம் எதனையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சி புரிவதற்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படல் வேண்டும்.

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| 1. விற்பனைக்கூடம் ஒவ்வொன்றுக்கும் .. .. | 1 0 |
| 2. 4 சதுர அடிக்கு மேற்படாத தள இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 0 10 |
| 3. 4 சதுர அடிக்கு மேற்பட்ட ஆனால் 20 சதுர அடிக்கு மேற்படாத தள இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. | 0 30 |
| 4. 30 சதுர அடிக்கு மேற்படாத தள இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 0 50 |
| 5. 50 சதுர அடிக்கு மேற்படாத தள இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 0 75 |
| 6. 100 சதுர அடிக்கு மேற்படாத தள இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 1 0 |

3. திறந்த வெளிப் பிரதேசத்திலுள்ள இடத்துக்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படல் வேண்டும்.

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (அ) 8 சதுர அடிக்கு மேற்படாத நில இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 0 20 |
| (ஆ) 8 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாத நில இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 0 30 |
| (இ) 25 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாத் நில இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 0 40 |
| (ஈ) 50 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாத நில இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 0 50 |

1-630—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

### தங்காலைப்பட்டினம்

நகரசபைகள் கட்டளைச்சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின்கீழ் தங்காலைப்பட்டினத்தின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ம் ஆப் சனவரி மீ 01 ந் உ.

#### கட்டடவரைவுப்படங்களைப் பரிசோதனைசெய்து பரிசீலனை செய்வது சம்பந்தமான துணைவிதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக் கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக் காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச்சீர்திருத்தக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனை செய்து பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப் படல் வேண்டும்.

#### அட்டவணை

| | ரூ. | ச. |
|---|---|---|
| 1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப் பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப்படங்கள். | | |
| (அ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 5 | 0 |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 10 | 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 25 | 0 |
| (ஈ) மேலதிக ஒவ்வொரு 1000 சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்துக்கு .. .. | 25 | 0 |
| 2. மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்படாத தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப் படங்களுக்கு, தற்போதுள்ள நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. .. | 10 | 0 |
| 3. புதிய வரைவுப்படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் அங்கீகாரத்தைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒன்றின் விடயத்தில் .. .. .. | 10 | 0 |

இவ்வட்டவணையில் " நிலப்பரப்பு " என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுள்ள இடம் எனப் பொருள்படும்.

1–631—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### மொரட்டுவைப் பட்டினம்

நகரசபைகள் கட்டளைச்சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின்கீழ் மொரட்டுவைப்பட்டினத்தின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக் கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆப் ஜனவரி மீ 1 ந் உ.

#### துணைவிதிகள்

நீர் வழங்கல் சம்பந்தமாக மொரட்டுவை நகரசபையால் ஆக்கப்பட்டு 1959 யூலை 24 ன் 11,814 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968 திசெம்பர் 27 ன் 14,834 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணை விதிகளின் வாயிலாகக் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுள்ள துணைவிதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) 32 ஆம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதியதுணைவிதியை இடுவதன்மூலம் :—

32 " வீட்டுக் கருமங்கள் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு மானிவாயிலாகவன்றி வேறு விதத்தில் நீர் வழங்கப்படுமிடத்து குழாய்வாயில் ஒவ்வொன்றுக்கும் ரூபா 4 வீதமான கட்டணமொன்று ஒவ்வொரு சேவை சம்பந்தமாகவும் மாதாந்தம் சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும்."

(2) 32 ஆம் துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன்மூலம்—

" 32 (அ) வீட்டுக்கருமங்களுக்கு மானிவாயிலாகவன்றி வேறு விதத்தில் நீர் வழங்கப்படுமிடத்துப் பின்வரும் கட்டணங்கள் சபைக்கு முற்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :—

சேவை இணைப்பொன்றுக்கு—

(அ) ½ அங்குலக் குழாய் வாயிலுடன் அதே சேவையில் அல்லது மனைத்தலத்தில் மூன்று குழாய்வாயிலுக்கு மேற்பட்ட எந்த எண்ணிக்கையையும் கொண்ட குழாய் வாயில்களுக்கு, ஒவ்வொரு குழாய் வாயிலுக்கும் மாதமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 1.00

(ஆ) ¾ அல்லது அதற்குக் கூடுதலான அங்குலக் குழாய்வாயிலுடன் அதே சேவையில் அல்லது மனைத்தலத்தில் மூன்று குழாய் வாயிலுக்கு மேற்பட்ட எந்த எண்ணிக்கையையும் கொண்ட குழாய் வாயில்களுக்கு, ஒவ்வொரு குழாய் வாயிலுக்கும் மாதமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூபா 2.00.

3. 35 ஆம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன்மூலம்—

35. வீட்டுக் கருமங்கள் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு மானிவாயிலாக நீர் வழங்குவதற்குப் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படவேண்டும் :—

(1) முழுதாக அல்லது பகுதியாக ஆட்சி செய்யப்படும் மனைத்தலங்களுக்கு—

(அ) இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர்ந்த வேறு தொழில் அல்லது உற்பத்தி எதையும் நடாத்தும் அல்லது செய்யும் நோக்கங்களுக்கு ஒவ்வொரு 1,000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

(ஆ) ஓட்டல், உணவுச்சாலை, தனியார் விடுதி, உறையகம், சினிமா மண்டபம், தவறணை, வடிசாலை, எண்ணெய் நிரப்பும் நிலையம், கலைக்கூடம், பாற்பண்ணை, தனியார் மருந்தகம், தனியார் ஊர்திச்சாலை அல்லது வேறு வியாபார மனைத்தலங்களின் நோக்கங்களுக்கு ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

(இ) அரசாங்க நிறுவனங்களாக, அரசாங்கக் கூட்டுத் தாபனங்களாக, பாடசாலைகளாக, கூட்டுறவுச் சங்கப்பணிமனைகளாக, கூட்டுறவுச் சங்கப்பணிமனைகளாக ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

(ஈ) பொது குளியல் இடங்களாக, ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

(உ) சீமெந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி எதையும் செய்யும் நோக்கங்களுக்கு ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 10.00 வீதம்.

(ஊ) விற்பனைக்கு அல்லது வாடகைக்கு குதிரைகளை, மாடுகளை அல்லது வாகனங்களை வைத்திருப்பதற்கு ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

2. பின்வரும் காரணங்களுக்காக நீர் உபயோகிக்கப்படும் மனைத்தலங்களுக்கு—

(அ) நீச்சல் தடாகங்கள், ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 10.00 வீதம்.

(ஆ) எத்தொழில் தொடர்பாகவும் உபயோகிக்கப்படாத நீர்ப்பீலிகள், நீரிறை மானிகள் ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 5.00 வீதம்.

(இ) கட்டட வேலைகள், வீதிகள் அமைத்தல் அல்லது வீதி செப்பனிடுதல் ஒவ்வொரு 1000 கலன்களுக்கும் ரூபா 10.00 வீதம்,

1–628—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

### நாவலப்பிட்டி நகரம்

நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் நாவலப்பிட்டி நகரத்து விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதிகள்.

ட. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ம் ஆடு சனவரி மீ 01 ந் வ.

#### துணை விதிகள்

1. இத்துணைவிதிகள் "சினிமாக்களில்" (நாவலப்பிட்டி) புகை, பிடித்தலைத் தடைசெய்யும் துணைவிதிகள் 1974 என எடுத்துக்காட்டப் படலாம்.

2. குறிக்கப்பட்டதொரு காலத்தின் போது சினிமா மண்டபத்திற்குள் ஆளெவரும் புகைப்பிடித்தலாகாது.

3. இரண்டாம் துணைவிதிக்கு முரணாகச் செயலாற்றும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவைக் கொண்ட குற்றப்பண மொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

4. சினிமா மண்டபமொவ்வொன்றினதும் உரிமம் பெற்றவர்—

(அ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்த பட்சம் மூன்று அங்குல உயரமான தடித்த எழுத்துக்களில் "புகைப் பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது" என்னும் வார்த்தைகளைக் கொண்ட அறிவித்தல்களை சினிமா மண்டபத்தினுள் துலாம்பரமான இடங்களில், பார்வைக்கு வைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மண்டபத்தினுள் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்னும் வார்த்தைகளைக் கொண்ட அறிவித்தல் ஒன்றையும் வாயில் முகப்பினுள்ள துலாம்பரமான ஓர் இடத்தில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

5. சினிமா ஒவ்வொன்றினதும் உரிமம் பெற்றவர் குறிக்கப்பட்ட காலத்தின்போது சினிமா மண்டபத்தினுள் எவ்வகையிலும் புகையிலையை விற்கக்கூடாது, அல்லது விற்கப்படுதலை அனுமதித்தலாகாது என்பது அவருக்கு வழங்கப்படும் உரிமத்தின் ஒரு நிபந்தனையாதல் வேண்டும்.

6. இத்துணைவிதிகளில்—

"சினிமா" என்பது ஒளிப்படம், மாய விளக்குக்கூடு அல்லது இவை போன்ற வேறு கருவிகளின் வாயிலாகப் படங்களை அல்லது கட்புலப் பொருட்களைப் பார்வைக்கு வைப்பதற்காக பகிரங்க அரங்காட்டுகள் துணைவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஒரு கட்டிடம் எனப் பொருள்படும்.

"குறிப்பிட்ட காலம்" என்பது பகிரங்க அரங்காட்டு ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னிருந்து ஆரம்பித்து அத்தகைய பகிரங்க அரங்காட்டு முடிவுறும் வரைக்கும் எனவும் அத்தகைய பகிரங்க அரங்காட்டு நடைபெறும் காலம் முழுவதையும் இது உட்படுத்தும் எனவும் பொருள்படும். "புகை பிடித்தல்" என்பது சுருட்டுகள், சிகரட்டுகள், பீடிகள் ஆகியவற்றின் உருவில் அல்லது சுங்கான் அல்லது ஹூக்கா அல்லது வேறுவித உதவியுடன் புகையிலையை புகைத்தல் எனப் பொருள்படும்.

"பகிரங்க அரங்காட்டு" என்பது (176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருக் கிறது.

1–629—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

# நானாவித அறிவித்தல்கள்

### பழுகாமம் கிராமப் பிரதேசம்

உள்ளூராட்சி மன்றங்கள் (நியமத்துணைவிதிகள்) சட்டம்

(261 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி மன்றங்கள் (நியமத்துணைவிதி கள்) சட்டத்தின், 3 ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்து, பழு காமம் கிராமப் பிரதேசத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நிருவாகத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் நிருவாகக் கட்டளை, அப்பிரிவின் நியதிப்படி இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

#### நிருவாகக் கட்டளை

"பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1972, நொவம்பர் 3 இன் 32 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுத் தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, 1973 ஜூன் 29 இன் 66 ஆம் இலக்க வர்த்தமானியில் அதுபற்றிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட "நூல்நிலை யங்கள்" பற்றிய நியமத்துணை விதிகளின் 42 ஆம் பாகத்தை, இக்கட்டளை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென (261 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி மன்றங்கள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின், 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், இத்தால் தீர்மானிக்கப்படுகிறது."

த. வாமதேவன்,
நிருவாகத்தர்,
பழுகாமம் கிராம இடப்பரப்பு.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
பழுகாமம் கிராமப் பிரதேசம்,
திருப்பழுகாமம், பெரியபோரதீவு.
1974 ம் ஆடு திசெம்பர் 18 ந் வ.

1–500—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

ஜவன் விளைஞர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)

ஜவன் விளைஞர் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17 (1) ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் காரணமாக, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதல்வராகிய அல்பிறெட் தங்கராசா துரையப்பா ஆகிய நான், தகுந்த அதிகாரியாக இருப்பதால், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் 1975 ம் வருடத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் மிருகங்களைக் கொல்வதை அல்லது இறைச்சியின் விற்பனையை, அல்லது விற்பனைக்காக இறைச்சியை வெளிக்காட்டுவதை இத்தால் தடை செய்கிறேன்,

#### அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1975 | .. | 3,10,17,24,27,31 |
| பெப்ருவரி | 1975 | .. | 7,14,21,25,28 |
| மார்ச | 1975 | .. | 7,11,14,21,26,28 |
| ஏப்பிரில் | 1975 | .. | 4,11,18,25 |
| மே | 1975 | .. | 2,9,16,23,24,30 |
| யூன் | 1975 | .. | 6,13,20,23,27 |
| யூலை | 1975 | .. | 4,11,18,22,25 |
| ஆகஸ்ட் | 1975 | .. | 1,8,15,21,22,29 |
| செப்ரெம்பர் | 1975 | .. | 5,12,19,26 |
| ஒக்ரோபர் | 1975 | .. | 3,10,17,19,24,31 |
| நவம்பர் | 1975 | .. | 7,14,18,21,28 |
| டிசெம்பர் | 1975 | .. | 5,12,18,19,26 |

அ. த. துரையப்பா
முதல்வர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசாட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2.1.75

1—501—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

### இறைச்சிக் கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்ட அறிவித்தல்

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய 1947ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் அட்டவணையில் காணப்படும் பேர்வழிக்காரரிடமிருந்து 1.1.75 தொடக்கம் 31.12.75 வரை இறைச்சிக்கடை உத்தரவுப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இக்கிராமச் சபையின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்கவிரும்பினால் காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் எமக்கு அனுப்பிவைக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

| விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | செய்யவிரும்பும் வியாபாரம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|---|
| 1. மீராசா அப்துல் கதீம் | 3ம் வட்டாரம், சின்னக்கிண்ணியா | மாட்டிறைச்சிக் கடை | குட்டித்தீவு |
| 2. மெய்தீன் பாவா வஜூர் | 1ம் வட்டாரம் சின்னக்கிண்ணியா | மாட்டிறைச்சிக் கடை | குட்டித்தீவு |

மு. சு. அய்யூப்,
அக்கிராசனர்
கிராமாட்சி மன்றம், ஆலங்கேணி.

ஆலங்கேணிக் கிராமாட்சி மன்ற அலுவலகம்,
கிண்ணியா 1.1.75

1–471—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### தலைமன்னார் கிராமசபை

கசாப்புக்காரர் பற்றி சட்ட அறிவித்தல்

இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவில் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காணப்படுவரிடமிருந்து 1975 ம் ஆண்டிற்கு கசாப்புக்காரர் உத்தரவுப் பத்திரம் வழங்கும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராமச்சபை எல்லைக்குள் வதிபவர் எவரேனும் கசாப்புக்காரர் உத்தரவுப் பத்திரம் கீழ்க்காணப்படும் நபருக்குக் கொடுக்கப்படுவதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணத்தை இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாய் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

விண்ணப்பகாரர் : வை. சவரிமுத்து விலாசம் : கீழியன் குடியிருப்பு தலைமன்னார்

வியாபாரம் செய்யும் இடம் : சந்தை வளவு கடை இல 6 தலைமன்னார்.

கிராமசபை அலுவலகம்,
தலைமன்னார் 5.1.75

எஸ். வெலிச்சோர் பீரிஸ்,
அக்கிராசனர்.
கிராமசபை, தலைமன்னார்

1–567—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

### நிந்தவூர் கிராமம், நிந்தவூர்

இறைச்சிக்காரர்கள் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர்கள் பற்றிய 1947 ஆம் ஆண்டின் 44 ம் இலக்கச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி பின்வரும் அட்டவணையில் பெயர் தரப்பட்டிருப்பவர்களிடமிருந்து 1975 ஆம் ஆண்டிற்கு இறைச்சிக்கடைகள் வைத்து வியாபாரம் நடத்துவதற்குக் கசாப்புக்காரர் அனுமதிப்பத்திரம் (புச்சர் லைசன்ஸ்) வழங்கும்படி விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

ஆகவே, இக்கிராமத்தின் நிர்வாக எல்லைக்குள் வாழ்கின்றவர்கள் எவரேனும் குறிக்கப்பட்ட இவ்வனுமதிப்பத்திரம் வழங்கலை மறுக்க விரும்பினால் அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத்திலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் மறுப்பிற்கான காரணங்களைக் காட்டி எழுத்துமூலம் இரு பிரதிகளில் எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

அட்டவணை

| | | பெயர் | விலாசம் | வட்டாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1. | ஆதம்வாவா அகமதுலெவ்வை | நிந்தவூர்—1 | 1 ம் வட்டாரம் | நிந்தவூர் பி. சந்தை |
| 2. | 1. | முகம்மதுத்தம்பி ஹைறுல்லா | நிந்தவூர்—1 | 2 ம் வட்டாரம் | ஷை |
| 3. | 1. | சம்சுதீன் சலீம் | நிந்தவூர்—3 | 3 ம் வட்டாரம் | ஷை |
| 4. | 2. | ஆதம்வாவா சீனிமுகம்மது | நிந்தவூர்—3 | 3 ம் வட்டாரம் | ஷை |
| 5. | 3. | கலந்தர் முகம்மது அலியார் | நிந்தவூர்—3 | 3 ம் வட்டாரம் | ஷை |
| 6. | 1. | கலந்தர் அப்துல்றஸ்சாக் | நிந்தவூர்—3 | 4 ம் வட்டாரம் | ஷை |
| 7. | 2. | அகமதுலெவ்வை ஹயாத்துமுகம்மது | நிந்தவூர்—3 | 4 ம் வட்டாரம் | ஷை |
| 8. | 1. | முகம்மது இப்றுலெவ்வை அகமதுலெவ்வை | நிந்தவூர்—4 | 5 ம் வட்டாரம் | ஷை |
| 9. | 2. | மீராக்குட்டி சீனித்தம்பி | நிந்தவூர்—4 | 5 ம் வட்டாரம் | ஷை |
| 10. | 3. | அலியார் அசனார் | நிந்தவூர்—5 | 5 ம் வட்டாரம் | ஷை |
| 11. | 4. | கலந்தர் சீனிமுகம்மது | நிந்தவூர்—5 | 5 ம் வட்டாரம் | ஷை |
| 12. | 5. | அசனார் ஆதம்வாவா | நிந்தவூர்—5 | 5 ம் வட்டாரம் | ஷை |
| 13. | 1. | உமறுலெவ்வை முகைதீன்வாவா | நிந்தவூர்—4 | 6 ம் வட்டாரம் | ஷை |
| 14. | 1. | முகம்மதுத்தம்பி அகமதுலெவ்வை | நிந்தவூர்—5 | 7 ம் வட்டாரம் | ஷை |
| 15. | 2. | அகமதுலெவ்வை சீனித்தம்பி | நிந்தவூர்—5 | 7 ம் வட்டாரம் | ஷை |
| 16. | 1. | அலியார் அகமதுலெவ்வை | நிந்தவூர்—5 | 8 ம் வட்டாரம் | ஷை |
| 17. | 2. | கலந்தர் அலியார் | நிந்தவூர்—5 | 8 ம் வட்டாரம் | ஷை |
| 18. | 3. | கலந்தர் அப்துல்மஜீத் | நிந்தவூர்—5 | 8 ம் வட்டாரம் | ஷை |

நாவாகஸ்தர் அலுவலகம்,
நிந்தவூர் கிராமம், நிந்தவூர்.
1974 ம் ஆண்டு டிசம்பர் மீ 31 ந் உ.

டபிள்யூ. குணரட்ன,
நிர்வாகஸ்தர்,
நிந்தவூர் கிராமம், நிந்தவூர்.

1–455—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

நாவுட்டான் மேற்கு கிராமச்சபை

கசாப்புக்கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

கசாப்புக்கடைக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 இன் 7(2) பிரிவின் தாற்பரியப்படி அதன் கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் பெயர்வழிக்காரரிடமிருந்து 1975 ம் ஆண்டு கசாப்புக்கடை நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக்கிராமச்சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினுல், மறுப்பதற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர், விலாசம் |
|---|---|---|
| உ. முகைதீன் பாவா .. | .. செம்மன் தீவு, முருங்கன் | .. செம்மன்தீவு, முருங்கன் |
| யூ. மீராலெப்பை .. | .. புதுவெளி, நாவுட்டான் | .. அளவக்கை |

கு. இம்மானுவேற்பிள்ளை,
தலைவர், கி.ச.

நாவுட்டான் மேற்கு,
கிராமச்சபை அலுவலகம்,
நாவுட்டான்.
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந உ.

1–413—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

---

கிளிநொச்சிப் பட்டினம்

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காணப்பட்டவர்களிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு இறைச்சி விற்பனைசெய்ய உத்தரவு தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தப் பட்டினத்தின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்த பதினைந்து நாள்களுக்கிடையில் இணைப்பிரதிகளில் எழுத்துமூலம் எனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | செய்யும் வியாபாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. எஸ். மன்சூர் .. | 116, கோலிச் ரேட், சோனக தெரு, யாழ்ப்பாணம் | மாட்டிறைச்சி .. | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக் கடை இல. 1. |
| 2. எம். சாகுல்கமிது .. | கமால்லேன், யாழ்ப்பாணம் .. | மாட்டிறைச்சி .. | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக் கடை இல. 2. |
| 3. எச். ரி. அபூசாலி, .. | திருநகர், கிளிநொச்சி .. .. | ஆட்டிறைச்சி .. | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1. |
| 4. க. அநூர்தீன் .. | திருநகர், கிளிநொச்சி .. .. | ஆட்டிறைச்சி .. | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 2. |
| 5. எம். ஏ. சி. எம். டீன் .. | 63, கமால் லேன், யாழ்ப்பாணம் .. | மாட்டிறைச்சி .. | பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக் கடை இல. 1. |
| 6. எம். எஸ். எஸ். முகதீன் .. | லெப்பைலேன், மூஸ்லிம் வீதி, யாழ்ப்பாணம் | ஆட்டிறைச்சி .. | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1. |

க. நல்லைநாதன்,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டினம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டினம்,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 2 ந உ.

1–640—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147.

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

1975 ஆம் ஆண்டிற்கான விகிதவரி விதித்தல்

திருத்திய ஸ்ரீ லங்கா (இலங்கை) சட்டவாக்கங்களின் அத்தியாயம் 252 ன் கீழுள்ள மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 230 ம் பிரிவின் பிரகாரமும், அதில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவும், 1974 ஆம் ஆண்டின்போது யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் குருநகர் வீடமைப்புத் திட்டம் உட்பட சகல வீடமைப்புத்திட்டங்களிலுமுள்ள வீடுகள் தவிர்ந்த ஏனைய சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள், குடிமனைகள் ஆகியவற்றின்மீது அமுலில் இருந்த பின்வரும் அதே வரி விகிதத்தையே 1975 ஆம் ஆண்டிற்கு திருத்திய வருடாந்த மதிப்பின் பிரகாரம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் அமுல் செய்யுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது :—

(அ) இதன் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தண்ணீர்ச் சேவையால் பயனடையும் பகுதிகள் உள்ள இடங்களுக்கு $16\frac{1}{2}$%;

(ஆ) இதன் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கு வெளியில் இருப்பதும் தண்ணீர்ச் சேவையால் பயனடையாத பகுதிகள் உள்ள இடத்திற்கு $14\frac{1}{2}$%.

2. மேற்படி விதித வரிப்பணம் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 1975 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1974 ம் ஆண்டு டிசெம்பர் மீ 30 ந் உ.

அட்டவணை

**வட்டார இல. 1 :** கந்தப்பசேகரம் ஒழுங்கையிலுள்ள 66 ம் இலக்கம் தவிர்ந்த சகல ஆதனங்களும்.

**வட்டார இல. 2, 3, 4, 5, 7, 19 :** மாநகர வீடமைப்புத்திட்டத்திலுள்ள வீடுகள் தவிர்ந்த ஏனைய ஆதனங்கள்.

**வட்டார இல. 6 :** கொழும்புத்துறை வீதியிலுள்ள இலக்கங்கள் 107/14, 107/15 தவிர்ந்த சகல ஆதனங்களும்.

வட்டாரம் 8

**அராலி விடுதி வீதி :** ஒற்றை இலக்கங்கள் 1—23 வரை சகல ஆதனங்களும்.

**ஆரியர் வீதி :** 1—29 வரையுள்ள (ஒற்றை இலக்கம்) 2—30 வரையுள்ள (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஆனந்தன் வடலி வீதி :** 1—17 ம், 21—75 ம் வரையுள்ள (ஒற்றை இலக்கம்) 2—8, 20—66/8 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கடற்கரை வீதி :** 1009 (ஒற்றை இலக்கம்) 554—586 வரையுள்ள (இரட்டை இலக்கம், உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை வீதி :** 243—345/2, 345/4—503 வரை (ஒற்றை இலக்கம்) 230—364 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை 1 ம் குறுக்கு வீதி :** 3—9/5, 23—27 வரை (ஒற்றை இலக்கம்) 4—6, 20—42 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை 2 ம் குறுக்கு வீதி :** 3—9/1 வரை (ஒற்றை) இலக்கம்) 4—14 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை 3 ம் குறுக்கு வீதி :** 1—5 வரை (ஒற்றை இலக்கம்) 4 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை 4 ம் குறுக்கு வீதி :** 1—17 வரை (ஒற்றை இலக்கம்) 2—16 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை 5 ம் குறுக்கு வீதி :** 1—41 வரை (ஒற்றை இலக்கம்) 10—18 வரையுள்ள (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சுவாமியார் வீதி :** 27—41/3, 41/7—51 வரை (ஒற்றை இலக்கம்) 6—36/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புங்கன்குளம் வீதி :** 10, 18, 20, 24, 30, 32, 34, 42, 48 தொடக்கம் 60 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நெடுங்குளம் வீதி :** 3—11, 17—69 வரை (ஒற்றை இலக்கம்) 2—28 34—80/3 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புனித மேரி 1 ம் ஒழுங்கை :** 7—9 வரை (ஒற்றை இலக்கம்) 8—10 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புனித மேரி 2 ம் ஒழுங்கை :** 10—10/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஆனந்தன் வடலி வீதி 3 ம் ஒழுங்கை :** 1—9 வரை (ஒற்றை இலக்கம்) 10 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**இலந்தைக்குளம் வீதி :** 7—49 வரை (ஒற்றை இலக்கம்) 8—30 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

வட்டாரம் 9

**நெடுங்குளம் வீதி :** 85—195 வறை (ஒற்றை இலக்கம்) 96—190 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்

**குகன் வீதி :** 5—17 வறை (ஒற்றை இலக்கம்) 6—12 வறை (இரட்டை இலக்கம்) கொண்ட சகல ஆதனங்களும்.

**அருளம்பலம் வீதி :** 9—11 வரை (ஒற்றை இலக்கம்) 6—66 வரை (இரட்டை இலக்கம்), உள்ள சகல ஆதனங்களும்.

**ஆன்காட்டி வீதி :**—9—15 வரை (ஒற்றை இலக்கம்) 6—12 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

வட்டாரம் 10

**கொழும்புத்துறை வீதி :** 185—229 வரை (ஒற்றை இலக்கம்) கொண்ட சகல ஆதனங்களும்.

**புனித சந்தனமாதா வீதி :** 31—51 வரை (ஒற்றை இலக்கம்) 4—36 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புனித சந்தனமாதா 2 ம் ஒழுங்கை :** 6—16 வரை (இரட்டை இலக்கம்) கொண்ட சகல ஆதனங்களும்.

**புங்கன்குளம் வீதி :** 61—65 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கண்டி வீதி :** 129—167 வரை (ஒற்றை இலக்கம்) 160—174 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கச்சேரி கிழக்கு ஒழுங்கை :** 7—75/2 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பேரின்பநாயகம் வீதி :** 2 (இரட்டை இலக்கம்) கொண்ட ஆதனம் மட்டும்.

**சந்தன மாதா கோவில் 2 ம் ஒழுங்கை :** 54 (இரட்டை இலக்கம்) கொண்ட ஆதனம் மட்டும்.

வட்டாரம் 13

**ஆஸ்பத்திரி வீதி :** 783—891/1 வரை (ஒற்றை இலக்கம்) 860—890 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கொழும்புத்துறை வீதி :** 1—49 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கண்டி வீதி :** 1—81 வரை (ஒற்றை இலக்கம்) 2—156 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கோவில் வீதி :** 47—123 வரை (ஒற்றை இலக்கம்) 2—124 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சுவாட்ஸ் ஒழுங்கை :** 1—33 வரை (ஒற்றை இலக்கம்) 2—30 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சோமசுந்தரம் ஒழுங்கை :** 1—29 வரை (ஒற்றை இலக்கம்) 2—28/1 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பழைய பூங்கா வீதி :** 195 ம் இலக்க ஆதனம் மட்டும்.

**காட்டுக்கந்தோர் ஒழுங்கை :** 1—45 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பிரதான வீதி :** 357—403 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**றக்கா ஒழுங்கை :** 5—15, 25—45 வரை (ஒற்றை இலக்கம்) 4—16, 32—56 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கோவில் வீதி 1 ம் ஒழுங்கை :** 1—31 வரை (ஒற்றை இலக்கம்) 2—30 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**றக்கா வீதி :** 23—81 வரை (ஒற்றை இலக்கம்) 32—74 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**மருதடி வீதி :** 1—73 வரை (ஒற்றை இலக்கம்) 2—64 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**மக்கிக்கிடங்கு ஒழுங்கை :** 5—9 வரை (ஒற்றை இலக்கம்) 4—10 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**இராசாவின் தோட்டம் வீதி :** 2—42 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**இராசாவின் தோட்டம் ஒழுங்கை :** 35—37 வரை (ஒற்றை இலக்கம்) 30—36 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

வட்டாரம் 14

**ஆஸ்பத்திரி வீதி :** 563—773/56 வரை (ஒற்றை இலக்கம்) 610—694 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**இரண்டாம் குறுக்குத் தெரு :** 167—219 வரை (ஒற்றை இலக்கம்) 158—220 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாலாம் குறுக்குத் தெரு :** 175—201 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி :** 4—266 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி 1 ம் ஒழுங்கை :** 5—65 வரை (ஒற்றை இலக்கம்) 8—10/4, 20/1—58 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி 2 ம் ஒழுங்கை :** 6—80 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி 3 ம் ஒழுங்கை :** 23—39 வரை (ஒற்றை இலக்கம்) 6—82/11 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**மாட்டின் வீதி :** 97—147/1/1 வரை (ஒற்றை இலக்கம்) 88—148/15 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**முதலாம் குறுக்குத் தெரு :** 154—220 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**மூன்றும் குறுக்குத் தெரு :** 185—251 வரை (ஒற்றை இலக்கம்) 160—162 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஸ்ரான்லி வீதி :** 316/14 என்னும் (இரட்டை இலக்கம்) தவிர்ந்த ஏனைய 337—377/5 வரை (ஒற்றை இலக்கம்) 302—448 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஸ்ரான்லி வீதி 2 ம் ஒழுங்கை :** 83/3—83/9 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**வேம்படி வீதி :** 45—91 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**அம்பலவாணர் வீதி :** 69—79 வரை (ஒற்றை இலக்கம்) 56—62/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 302—350 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

### வட்டாரம் 15

**பருத்தித்துறை வீதி :** 197—257 வரை (ஒற்றை இலக்கம்) 270—360 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**அம்மன் வீதி :** 63, 65, 67, 67/1 தவிர்ந்த 3—69 வரை (ஒற்றை இலக்கம்) 20/1 தவிர்ந்த 4—72 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கந்தப்புராண வீதி :** 1—3 வரை (ஒற்றை இலக்கம்) 6—8 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி 1 ம் ஒழுங்கை :** 7—25 வரை (ஒற்றை இலக்கம்) 6—46 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பலாலி வீதி :** 80—160 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 371—495 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

### வட்டாரம் 16

**பலாலி வீதி :** 81—133 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 165—177, 339—345 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கஸ்தூரியார் வீதி :** 360—470 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கல்லூரி வீதி :** 50—56 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

### வட்டாரம் 17

ஆஸ்பத்திரி வீதி, கலைப்புலவர் வீதி, சி. பொன்னம்பலம் வீதி 1ம் ஒழுங்கை, சி. பொன்னம் பலம் வீதி 2 ம் ஒழுங்கை, சி. பொன்னம்பலம் வீதி 3 ம் ஒழுங்கை, சி. பொன்னம்பலம் வீதி 4 ம் ஒழுங்கை ஆகியவற்றில் உள்ள சகல ஆதனங்களும்.

**கன்னாதிட்டி வீதி :** 71—159 வரை (ஒற்றை இலக்கம்) 88—180 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கன்னாதிட்டி ஒழுங்கை :** 6—12/5 ம், 14—18/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கஸ்தூரியார் வீதி :** 2—354 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஸ்ரீ வெங்கடேசர் வீதி :** 21/3—45 வரை (ஒற்றை இலக்கம்) 48—50 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சிரும்பியடி வீதி :** 15—33 வரை (ஒற்றை இலக்கம்) 14—34 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 234—298 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பருத்தித்துறை வீதி :** 65—185/1 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பலாலி வீதி :** 33—73 வரை (ஒற்றை இலக்கம்) 34—70 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பலாலி வீதி 2 ம் ஒழுங்கை :** 3—15 வரை (ஒற்றை இலக்கம்) 4—12 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சி. பொன்னம்பலம் வீதி (மணிக்கூட்டு வீதி) :** 87—475 வரை (ஒற்றை இலக்கம்) 110—488 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**யாழ் வீதி :** 29—33 வரை (ஒற்றை இலக்கம்) 4—36, 68—82 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**யாழ்பாடி வீதி :** 5—15 வரை (ஒற்றை இலக்கம்) 14 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**விக்ரோறியா வீதி :** 1—43 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஸ்ரான்லி வீதி :** 1—331 வரை (ஒற்றை இலக்கம்) 38—302 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

### வட்டாரம் 18

**ஆஸ்பத்திரி வீதி:** 19—285/2 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கன்னாதிட்டி வீதி :** 1—65 வரை (ஒற்றை இலக்கம்) 4—78 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கஸ்தூரியார் வீதி :** 45—493 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கஸ்தூரியார் வீதி 1 ம் ஒழுங்கை :** 7—15 வரை (ஒற்றை இலக்கம்) 16–16/5 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கஸ்தூரியார் வீதி 2 ம் ஒழுங்கை :** 9—15 வரை (ஒற்றை இலக்கம்) 2—10 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**காங்கேசன்துறை வீதி :** 157—541/2 வரை (ஒற்றை இலக்கம்) 136/1—370, 388—388/16, 388/52/1/2—398, 488—518 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கோபால் ஒழுங்கை :** 4—16 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கல்லூரி வீதி :** 32—42 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கில்னர் கல்லூரி ஒழுங்கை :** 45—59 வரை (ஒற்றை இலக்கம்) 32—38 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சிவன்கோவில் வடக்கு வீதி :** 41—65 வரை (ஒற்றை இலக்கம்) 10—76 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சிவன்கோவில் மேற்கு வீதி :** 5 (ஒற்றை இலக்கம்) மட்டும் உள்ள ஆதனம்.

**சிவன் புண்ணை வீதி :** 113—123 வரை (ஒற்றை இலக்கம்) 74—180 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**சீனிவாசகம் வீதி :** 4—120 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**செம்மா ஒழுங்கை :** 1—43 வரை (ஒற்றை இலக்கம்) 2—40 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**தபால் கந்தோர் ஒழுங்கை :** 2—12 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 133—159 வரை (ஒற்றை இலக்கம்) 92—100/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புன்னாலை வீதி :** 5—23, 41—175 வரை (ஒற்றை இலக்கம்) 2—230 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**மின்சார நிலைய வீதி :** 3—81 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**வைரவர் கோவில் ஒழுங்கை :** 2—14 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**யும்மா பள்ளிவாசல் ஒழுங்கை :** 1—131 வரை (ஒற்றை இலக்கம்) 2—90 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பிரப்பன்குளம் வீதி :** 39 ம் இலக்க ஆதனம் மட்டும்.

### வட்டாரம் 20

அராலி வீதியில் உள்ள 47—69/1 (ஒற்றை இலக்கம்) தவிர்ந்த ஏனைய சகல ஆதனங்கள்.

### வட்டாரம் 21

**அராலி வீதி :** 7, 7/1, 25, 27, 29, 31, 33 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஆசாத் வீதி :** 31—119 வரை (ஒற்றை இலக்கம்) 22—122 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஐதுறூஸ் மாக்கான் வீதி :** 1—41 வரை (ஒற்றை இலக்கம்) 8—48 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**இடுகாடு வீதி :** 68—96 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**அல்ஹாஜ் மீராப்பிள்ளை வீதி :** 6—22 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கலீமா வீதி :** 9—33/3 வரை (ஒற்றை இலக்கம்) 10—42 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கலிபா அப்துல்காதர் வீதி :** 85—203 (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கலிபா அசனாலெப்பை வீதி :** 7—33 (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கலிபா அப்துல் ஹமீட் வீதி :** 7—115 (ஒற்றை இலக்கம்) 10—120 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**செய்யது ஐதுறூஸ் வழி :** 2—8 (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புன்னாலை வீதி :** சகல ஆதனங்களும்.

**நாவலர் வீதி :** 3—89 (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**முஸ்லீம் கல்லூரி வீதி :** 157—371 வரை (ஒற்றை இலக்கம்) 146—380 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஜின்னா வீதி :** 11—101 வரை (ஒற்றை இலக்கம்) 8—122 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**ஓட்டுமடம் வீதி :** 24/1 (இரட்டை இலக்கம்) உள்ள ஆதனம் மட்டும்.

**பொன்னப்பா வீதி :** 3—33 வரை (ஒற்றை இலக்கம்) 8—30 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பிரப்பன்குளம் வீதி :** 5—29 வரை (ஒற்றை இலக்கம்) 12—32/1 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**பி. ஏ. தம்பி ஒழுங்கை :** 5 ம் இலக்க ஆதனம் மட்டும்.

### வட்டாரம் 22

**ஓட்டுமடம் வீதி :** 9—29, 29/20—29/33 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**புன்னாலை வீதி :** 520—640 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

### வட்டாரம் 23

**கஸ்தூரியார் வீதி :** 472—504 வரை (இரட்டை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

**கல்லூரி வீதி :** 39—47 வரை (ஒற்றை இலக்கம்) உள்ள சகல ஆதனங்களும்.

1- 456—17.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 147

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்களை செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | வெள்ளி | 3.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 27.12.74 |
| | வெள்ளி | 10.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 3.1.75 |
| | வெள்ளி | 17.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 10.1.75 |
| | வெள்ளி | 24.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 17.1.75 |
| | வெள்ளி | 31.1.75 .. | 12 மதியம் | வெள்ளி | 24.1.75 |
| பெப்புருவரி .. | வெள்ளி | 7.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.2.75 |
| மாச்சு .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல் .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே .. .. | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.